1975 ஏப்ரல் 8]

அடுத்து, அங்கங்கே அவர்களுக்கு உணவு வசதிகளை ஏற்பாடு செய்கின்ற வகையில் கூடுமான வரையில் அங்கே கட்டிடங்களை நாமே கட்டி, அதை ஏலத்திற்கு விட்டு, அதிலே உணவு வகைகளை வழங்கலாம் என்ற ஒரு யோசனையின் அடிப்படையில் மாமண்டூரிலே மட்டும் முதலாவ தாக ஒரு கட்டிடத்தைக் கட்டி, அதற்கான ஏற்பாட்டைச் செய்வதாக இருக் கிறோம். படிப்படியாக மற்ற இடங்களிலும் அரசுப் போக்குவரத்துத் துறை சார்பிலே அத்தகைய கட்டிடங்கள் அமைக்கப்பெற்று பயணிகளுக்கு அத்தகைய ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, விழுப்புரத்திலே அநேகமாக எல்லா பஸ்களும் நிறகன்றன. விழுப்புரத்திலும் சாப்பாட்டுக் கென்றிருந்த ஓரிடமும் இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. அதுமாத்திர மல்லாமல், பொதுவாக, சிறுநீர் கழிக்க எந்த இடமும் இல்லாத நிலைமையிருக்கிறது. ஆகவே, முக்கியமான சென்டர்களிலேயாவது உடன டியாகக் கவனித்து, அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விழுப் புரத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தைப்போல், உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

Accidents involving Pallavan Transport buses

*596 *Q*.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of deaths in the City of Madras during 1973 and 1974 due to accidents involving the Pallavan Transport buses ; and

(*b*) the measures taken to prevent such accidents ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பல்லவன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகள் சம்பந்தப்பட்ட விபத்துக்களில் 1973-ல் 53 பேரும், 1974-ல் 91 பேரும் உயிர் இழந்தனர்.

(இ) விபத்துக்களைத் தவிர்க்க கீழ்க்காணும் ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

பேருந்துப் பயணிகளை ஒழுங்குபடுத்தி அனுப்புவதற்காக, போக்கு வரத்துச் சீரமைப்பாளர்கள், சீரணித் தொண்டர்கள் ஆகியோர் நியமிக் கப்பட்டுள்ளனர். பேருந்துப் படிகளில் நின்று பயணம் செய்வதைத் தடுக்க பல்லவன் போக்குவரத்துக் கழகமும், காவல் துறையினரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். பேருந்து வலவர்களுக்காக, “சாலைப் பாதுகாப்பு” பற்றிய வகுப்பு ஒன்று சென்னை, தொழிலாளர் கல்வி வட்டார இயக்குநர் உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த விபத்துக்களிலே இறந்தவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், இனிமேல் அந்த மாதிரி விபத்துக்களில் இறப்பவர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பதற்கு வேண்டிய ஒரு முறையான ஏற்பாடு செய்யப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவ்வப்போது நஷ்டயீடு அந்த விபத்துக்களுக்கேற்றாற்போல் accident compensation வழங்கப்பட்டு வருகிறது.

Common Good Fund of Religious Endowments Department

*597 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that there are regulations govering the expenditure incurred from out of the Common Good Fund of the Commissioner of Hindu Religious and Charitable Endowments Department ; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the table of the House ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) அவையின் மேசைமீது இதுபற்றி நகல்கள் @ வைக்கப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கோயில்களில் பழுது ஏற்பட்டால், அவைகளை ரிப்பேர் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையையோ, பூரா தொகையையோ, சர்க்காருடைய அனுமதி பெற்று கொடுப்பதாக இந்த அறிக்கையிலேயிருக்கிறது. அனுமதிக்க எந்தெந்த விதிகளை பூர்த்தி செய்ய வேண்டும் ? அல்லது பிரையாரிட்டி பேசிசிலே கொடுக்கப்படுகிறதா ? எந்த அடிப்படையிலே இந்தமாதிரி உதவி கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தந்த கோயில்களுடைய வருமானத்தைப் பொறுத்தவரையில் பிரிவு 12 இரண்டாவது துணைப் பிரிவின் கீழ் நிர்வாக நிதியாக, அட்மினிஸ்ட்ரேடிவ் ஃபண்ட் என்பதாகச் செலுத்த வேண்டும். அதற்கடுத்த பிரிவு 192-ல் இரண்டாவது பிரிவு தணிக்கை நிதி. அந்த இரண்டு, நிர்வாக நிதி, தணிக்கை நிதி இரண்டும் செலுத்தியது போக, மீதியிருக்கிற பணத்தை எந்தெந்த வகையிலே செலவிட வேண்டுமென்பதற்கு விதிகளை நாம் வைத்திருக்கிறோம். அந்தந்தக் கோயில்களிலே நிர்வாகச் செலவு போக

@ 121—125ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.